Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JUNE 05, 2024

புதன்கிழமை ஜூன் 05, 2024 | ஒளி: 09 கதிர்: 266 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## காஸ் விலை குறைந்தது




சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன்படி, 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் 150 ரூபாவினால் குறைக்கப்படவுள்ள நிலையில், அதன் புதிய விலை 3,790 ரூபாவாகும்.

தொடர்ச்சி P2

தேர்தல் முடிவுகள் 2024:

# பாஜக கூட்டணி 290+, இண்டியா 220+





**40 தொகுதிகளிலும் திமுக+ முன்னிலையில்**

**கனிமொழி வெற்றி**

இந்தியா முழுவதும் 7 கட்டங்களாக நடத்தப்பட்ட மக்களவை தேர்தலில் பதிவான வாக்குகள் ஜூன் 4 காலை 8 மணி முதல் எண்ணப்பட்டன. மாலை 3 மணி நிலவரப்படி பாரதிய ஜனதாக கட்சி (பாஜக) கூட்டணி 292 இடங்களிலும், இண்டியா கூட்டணி 232 இடங்களிலும் முன்னிலை வகிக்கிறது. பிற கட்சிகள் 19 இடங்களில் முன்னிலை வகிக்கின்றன.

இந்தப் போக்கு மத்தியில் மீண்டும் பாஜக ஆட்சி அமைக்கும் சூழல் உருவாக்கி வந்தாலும், கடும் நெருக்குதலுடன் கூடிய வெற்றியையே பெறும் என்பது தெரிகிறது.

இதற்கிடையில் இண்டியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்துக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அழைப்பு விடுத்துள்ளார். அதேபோல், பாஜகவும் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்துகிறது. பாஜகவுக்கு தனிப் பெரும்பான்மை இல்லாததால் தேசிய ஜனநாயக கூட்டணி அட்சி அமைக்க ஏதுவாக இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## 26 பேர் மரணம்: 130,021 பேர் பாதிப்பு



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் இதுவரையில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். 130,021 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (06) விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “அஸ்வெசும குறித்து கவனம் செலுத்தவும்”



தகுதி இல்லாத இலட்சக்கணக்கானோருக்கு அஸ்வெசும கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டுமென பொதுஜன பெரமுன எம்பி. ஜகத்குமார வலியுறுத்தினார் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “அரசு முயன்றால் தோற்கடிப்போம்”



உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளுக்கு மாறாக மின்சார திருத்தச் சட்டமூலத்தை அரசு நிறைவேற்ற முயன்றால் அதனை தோற்கடிப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எச்சரித்தார்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) மின்சார திருத்தச் சட்டம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்ததன் பின்னர் கூற்றொன்றை முன்வைத்தே இவ்வாறு எச்சரித்தார்.

தொடர்ச்சி P2

தோட்டப்புற பாடசாலைகளுக்கு

## ஆசிரியர் உதவியாளர்களை நியமிக்க நடவடிக்கை



தோட்டப்புற பாடசாலைகளுக்கான ஆசிரியர் உதவியாளர் நியமனத்திற்கான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரத்தில் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்ததார்.

கல்வியியற் கல்லூரி ஊடாக ஆசிரியர்களை சேர்ப்பதென்றால் தோட்டப்புறங்களில் இஸெற் வெட்டுப்புள்ளிக்கமைய ஆசிரியர்கள் தெரிவாகுவதில்லை. பட்டதாரிகளில் குறிப்பிட்ட அளவிலேயே இருக்கின்றனர். தோட்டப்புற பாடசாலைகளுக்காக இம்முறை நியமனங்கள் வழங்கப்படும் என்றார்.

தொடர்ச்சி P2

## ஐ.நாவில் மலையகம் 200 முத்திரை கையளிப்பு



ஜெனிவாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான், பெருந்தோட்ட சமூகத்தின் 200வது வருடத்தின் முதல் நினைவு முத்திரையை தொழில் அமைச்சின் செயலாளருடன் இணைந்து ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலகவுக்கு வழங்கி வைத்தார்.

## “அஸ்வெசுமவை மாற்றியுள்ளோம்”



அஸ்வெசும கொடுப்பனவு டவடிக்கைகளில் நடைமுறையில் இருந்த முறைமையை நாம் மாற்றியுள்ளோம் அதில் குறைபாடுகள் காணப்பட்டால் அதனை நிவர்த்தி செய்வோம். எனினும், அந்த முறைமையை முழுமையாக நீக்கமுடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) எதிர்க்கட்சி எம்.பி. ஹர்ச டி சில்வா எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “பாதித்த குடும்பங்களுக்கு ஒதுக்கும் தொகை போதாது”

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு ஒதுக்கப்படும் தொகை, தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப, போதாது என சுட்டிக்காட்டி எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்த நிவாரண சுற்றறிக்கையை மாற்றியமைக்க வேண்டுமெனக் கேட்டக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில், எதிர்பாராத காலநிலையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக இலட்சக்கணக்கான மக்கள் சிக்கிக்கொண்டுள்ளனர். இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் குறுகிய காலத்தில் விரைவாக வழங்கப்பட வேண்டும். பலர் உணவு,

தொடர்ச்சி P2

## இந்திய ஆசிரியர்களின் விவகாரம்:

### “அனுமதி இல்லை”

தோட்டப்புற பாடசாலைகளில் இந்திய ஆசிரியர்கள் பணியாற்றுவதற்காக தனது காலத்தில் எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். கல்வியமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில், நான் இந்த அமைச்சுப் பதவியை பொறுப்பேற்ற பின்னர். இந்தியாவில் இருந்து இரண்டாயிரம் ஆசிரியர்களுக்கு தன்னார்வ அடிப்படையில் தோட்டப்புறங்களில் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்படவில்லை. அதற்கு முன்னர் நடந்திருக்கலாம் என்றார்.



ஆனால், இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக பயிற்றுவிப்பாளர்கள் குழுவொன்று குறிப்பாக ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்கள் தொடர்பில் 40 – 50 பேர் வரையிலான மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயிற்றுவிப்பாளர்கள் குழுவொன்றுக்கு அனுமதியை பெறும் வகையில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஊடாக பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது அது மட்டுமே தனக்குத் தெரியும் என்றார்.

### “நஞ்சை விதைக்கின்றனர்”

இந்தியாவில் இருந்து வந்து இரண்டாயிரம் ஆசிரியர்கள் தோட்டப்புற பாடசாலைகளில் தன்னார்வ அடிப்படையில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும், இவர்கள் மாணவர்களிடையே கல்விக்கு பதிலாக நச்சுக் கருத்துக்களை பரப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் புலனாய்வு தகவல்கள் வெளியாகியுள்ளதாக எதிரணி சுயாதீன பாராளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) கல்வி அமைச்சரிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



தோட்டப்புற பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இதன்காரணமாக கடந்த காலத்தில் இந்தியாவில் இருந்து இரண்டாயிரத்திற்கும் அதிகமானவர்கள் தோட்டப்புற பாடசாலைகளில் தன்னார்வ அடிப்படையில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றதாக அண்மையில் ஊடகங்கள் மூலம் தகவலொன்று வெளியாகியிருந்தது. எமது நாட்டு புலானாய்வு பிரிவும் அறிக்கையிட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக இவ்வாறு செய்திருக்கலாம்.

தொடர்ச்சி P2

### “முற்றிலும் பொய்யானது”

இந்தியாவில் இருந்து வந்த இரண்டாயிரம் ஆசிரியர்கள் மலையக பாடசாலைகளில் சேவையில் ஈடுபடுவதாக வெளியாகியுள்ள தகவல்கள் முற்றிலும் பொய்யானது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.வேலுக்குமார் தெரிவித்தார்.



விமல் வீரவன்சவினால் தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பில் கருத்துரைத்த போதே வேலுகுமார் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கருத்து முற்றிலும் பொய்யாகும். அவ்வாறு இந்தியாவில் இருந்து ஆசிரியர்களுக்கு எந்தவித அனுமதியும் வழங்கப்படவும் இல்லை, இரண்டாயிரம் இந்திய ஆசிரியர்கள் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவும் இல்லை.அது முற்றிலும் பொய்யான தகவலே என்று பொறுப்புடன் கூறுகின்றேன் என்றார்.

PAGE 1 தொடர்ச்சிகள்



# பாஜக கூட்டணி 290+, இண்டியா 220+

தமிழகம், புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் பதிவான வாக்குகளின் நிலவரப்படி திமுக கூட்டணி 40 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளது.

தூத்துக்குடியில் திமுக வேட்பாளர் கனிமொழி வெற்றியை நோக்கி முன்னேறி வருகிறார். அவர் இரண்டாம் முறையாக மக்களவை உறுப்பினராகிறார். கோவையில் அண்ணாமலைக்கு தொடர் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கடந்த ஏப்ரல் 19-ம் திகதி முதல் ஜூன் 1-ம் திகதி வரை 7 கட்டங்களாக மக்களவை தேர்தல் நடத்தப்பட்டது. மொத்தம் உள்ள 543 தொகுதிகளில், குஜராத்தின் சூரத் தொகுதியில் மட்டும் பாஜக வேட்பாளர் முகேஷ் தலால் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். மற்ற 542 தொகுதிகளிலும் தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 64.20 கோடி பேர் வாக்குரிமையை செலுத்தி உள்ளனர். 8,000-க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் குதித்திருந்தனர்.

## காஸ் விலை குறைந்தது

இந்த விலை குறைப்பு, செவ்வாய்க்கிழமை (04) நள்ளிரவு முதல் அமுலாகும்.

5 கிலோ கிராம் எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 60 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 1,525 ரூபாவாகும். 2.3 கிலோ கிராம் எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 28 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 712 ரூபாவாகும்.

இந்நிலையில், லாஃப் சமையல் எரிவாயுவின் விலையும் குறைக்கப்பட்டுள்ளது. 12.5 கிலோகிராம் எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 160 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலையாக 3,680 ரூபாயாகும்.

5 கிலோகிராம் எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 65 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 1,477 ரூபாயாகும்.

## 26 பேர் மரணம்: 130,021 பேர் பாதிப்பு

நாட்டில் கடந்த சில தினங்களில் நிலவிய சீரற்ற காலநிலையால் கடந்த திங்கட்கிழமை வரை 23 மாவட்டங்களில் 33 ஆயிரத்து 622 குடும்பங்களைச் சேர்ந்த 130,021 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 26 பேர் உயிரிழந்துள்ளனர். 41 பேர் காயமடைந்துள்ளனர்.

மண்சரிவு, வெள்ள அபாயங்களைக் கருத்திற் கொண்டு 116 தற்காலிக பாதுகாப்பு மத்திய முகாம்களில் 2,369 குடும்பங்களைச் சேர்ந்த 9,248 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான வசதிகள் பிரதேச செயலக பிரிவுகள் ஊடாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அனர்த்தங்களில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கு முப்படையினர் செயற்படுகின்றனர். இயற்கை அனர்த்தத்தை முகாமைத்துவம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எதற்கும் எதிர்ப்பு தெரிவிப்பது தற்போது வழமையாகி விட்டது என்றார்.

அனர்த்தங்கள் தொடர்பில் அறிய தருமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் 117 என்ற விசேட தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. பிரதேச செயலக பிரிவுகள் முன்வைக்கும் யோசனைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றார்.

## "பாதித்த குடும்பங்களுக்கு ஒதுக்கும் தொகை போதாது"

உடைகளை கூட இழந்துள்ளனர். எனவே? முறையான வேலைத்திட்டத்தை உடனடியாக முன்னெடுக்க வேண்டும். மாவட்ட செயலகங்களுக்கு மேலதிகமாக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டாலும் அது போதுமானதாக இல்லை என்றார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் சுற்றறிக்கையை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு 2022.05.16 ஆம் திகதி வெளியிட்டது. அதன்பிறகு ஏற்பட்ட பொருளாதார சரிவில் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இந்த சுற்றறிக்கையின் மூலம் ஒரு நபருக்கு தினசரி சமைத்த உணவுக்கு 450ரூபாய், ஒரு நபருக்கு வாரத்திற்கு உலர் உணவுக்காக 1,350ரூபாய், 2 பேர் கொண்ட குடும்பத்துக்கு 1,800 ரூபாய்,3 பேர் கொண்ட குடும்பத்துக்கு 2,100ரூபாய், 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு 2,400 ரூபாய் மற்றும் 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு 2,700 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு பொருந்தாது என்பதால் இதனை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும்

நிவாரணங்களை வழங்கும் ஒழுங்கை படிப்படியாக முறையாக மாற்றியமைக்க வேண்டும். முறையான அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டத்தை கொண்டிருந்தாலும், அவை காலத்துக்கு ஏற்றால் போல் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை வெள்ளம் மற்றும் அனர்த்தங்களை எதிர்கொள்ள செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி முன்னாயத்த ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும். முன்கணிப்பு மாதிரிகள், குறுகிய கால மற்றும் நீண்ட கால முன்னறிவிப்புகள் தொடர்பான தகவல்களுடன் இதை மேம்படுத்தலாம். தற்போது மாத்தறையில் வெள்ள அனர்த்த நிலைமை மோசமாகி வருகின்றது என்றார்.

## "அஸ்வெசுமவை மாற்றியுள்ளோம்"

அஸ்வெசும இரண்டாம் கட்டத்தை உறுதிப்படுத்துவது மிக முக்கியம். இம்தம் 15 ஆம் திகதியளவில் உறுதிப்படுத்தப்படும் இந்த இரண்டாம் கட்ட விடயங்கள் முக்கியமானவை.

மூன்று தசாப்தங்களாக பின்பற்றப்பட்டு வந்த நடைமுறையையே நாம் தற்போது மாற்றியுள்ளோம். இந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாத அல்லது அதனை விரும்பாத தரப்பினரும் உள்ளனர். பழைய முறைமையையே முன்னெடுத்து அதிலுள்ள தவறுகள், அது தொடர்பான குற்றச்சாட்டுக்களுடன் தொடர்ந்து பயணிக்க வேண்டும் என சிந்திக்கும் தரப்பினரும் உள்ளனர்.

எவ்வாறெனினும், இந்த நடவடிக்கைகளில் சில குறைபாடுகள் உள்ளன என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அந்த குறைபாடுகளை இக்காலங்களில் இனங்கண்டு கொண்டுள்ளோம்.அது தொடர்பில் அரச அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் நாம் பேச்சுவார்த்தை நடத்தியே குறித்த முறைமையில் மாற்றங்களை கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதேவேளை, கடந்த வருடம் டிசெம்பர் 31ஆம் திகதி முதல் இன்று வரை பிரதிபலனை பெற்றுக் கொள்ளாத பயனாளிகளும் உள்ளனர். அது தொடர்பான விபரங்களை நாம் அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவுக்கு இந்த வாரத்தில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளோம் என்றார்.

அந்தக் குழுவின் அங்கீகாரம் கிடைத்ததும் நாம் அடுத்த வாரத்தில் அதனை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு அதனை நிறைவேற்றி, அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும்.

அந்த வகையில் பிரதிபலன்கள் கிடைக்காதவர்களுக்கு வரவு- செலவுத் திட்டத்தில் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளமைக்கு ஏற்ப அதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியும்.

எனவே, புதிய முறைமையை முழுமையாக நீக்க முடியாது. எனினும் அதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வோம் என்றார்.

## "அஸ்வெசும குறித்து கவனம் செலுத்தவும்"

வறுமை நிலைக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு அஸ்வெசும கொடுப்பனவுகள் வழங்கும் திட்டம் ஆரம்பித்த காலத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்யாமல் அரசாங்கம் எத்தனை பில்லியன்களை அதற்காக செலவிட்டாலும் கிடைக்க வேண்டியவர்களுக்கு அது கிடைக்காமையால் இத்திட்டம் பயனற்றதாகி விடும்

நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் அந்த கொடுப்பனவை பெற்றுக் கொள்ள தகுதி இருந்தும் அந்த கொடுப்பனவு கிடைக்காமையால், வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாமல் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். ஆனால் அஸ்வெசும கொடுப்பனவு தகுதி இல்லாத இலட்சக்கணக்கானோருக்கு அது வழங்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் உரிய கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அஸ்வெசும கொடுப்பனவு வழங்கும் செயற்றிட்டங்களில் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. இது வறுமை நிலையில் உள்ள அடிமட்ட மக்களுக்கான திட்டம் என்பதால் துறை சார்ந்த அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தரவுகள் பெறப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கையை முன்னெடுப்பது அவசியமாகும்.

நடைமுறைப்படுத்த முடியாத சட்டங்களை ஏற்படுத்தி அவ்வாறு துறை சார்ந்த அதிகாரிகள் இதில் சம்பந்தப்பட முடியாத நிலையே காணப்படுகின்றது. அந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

அந்த சட்டத்தை தற்காலிகமாவது நீக்கி கிராமப்புற மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற கீழ்மட்ட துறை சார்ந்த அதிகாரிகளை தொடர்பு படுத்தி முறையான திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## "அரசு முயன்றால் தோற்கடிப்போம்"

பாராளுமன்றத்தில் சபாநாயகர் முன்வைத்த மின்சார திருத்தச் சட்டம் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் அவதானிப்புகள் குறித்து நோக்கும் போது ஒட்டுமொத்தமாக இந்தச் சட்ட மூலத்தில் கடுமையான சிக்கல்கள் இருப்பதாகத் தெரிகிறது. எனவே இதனை நிறைவேற்ற 2/3 பெருன்பான்மை தேவைப்படுகிறது. தற்போதைய அரசாங்கத்திற்கு 2/3 பெரும்பான்மை இல்லை. இந்த சட்டமூலத்தை வியாழக்கிழமையே கொண்டு வராமல் நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட அவதானிப்புகளையும் பரிந்துரைகளையும் உரிய முறையில் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் இச்சட்ட மூலத்தை முன்வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

உயர்நீதிமன்றத்தின் அவதானிப்புகளைப் புரிந்து கொண்டு, இந்நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் மின்சாரத்தை எவ்வாறு வினைத்திறனுடன் வழங்குவது மற்றும் மின்சாரத் துறையை நட்டம் இன்றி எவ்வாறு இலாபமீட்டும் முறையில் முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். இக்குறைபாடுகளை களைய வேண்டும் என்பதனால், இதை வியாழக்கிழமை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமல், மேற்கொண்டு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, இந்த திருத்த சட்டமூலத்தை சட்டவிரோதமாக நிறைவேற்ற முயற்சித்தால் இதனை தோற்கடிப்போம் என்றார்.

## "நஞ்சை விதைக்கின்றனர்"

ஆனால் புலனாய்வு அறிக்கைகளின்படி இந்திய ஆசிரியர்கள் தோட்டப்புற மாணவர்களுக்கு ஏதோவொருவகையில் நஞ்சை ஊட்டுவதாகவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க எமக்குரிய முறைமையில் செல்லாது வேறு வெளியாரின் உதவிகளை தன்னார்வ அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போது வெளியார் வருவது எம் மீதான பாசத்தால் அல்ல என்றார்.

குறித்த புலனாய்வு அறிக்கை கல்வி அமைச்சுக்கு கிடைத்ததா? அது தொடர்பில் ஊடகங்களில் வெளியான தகவல்கள் மீது அவதானம் செலுத்தப்பட்டதா? இந்திய ஆசிரியர்கள் இரண்டாயிரம் பேர் தோட்டப்புற பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதை போன்று வந்து வேறு வகையிலான எண்ணங்கள், நஞ்சை ஊட்டுவதை தடுப்பதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமல்லவா? அது தொடர்பில் கல்வி அமைச்சர் அவதானம் செலுத்தியுள்ளாரா? என்பதே கேள்வியாகும் என்றார்.

## ஆசிரியர் உதவியாளர்கள்..

இதேவேளை, ஆசிரியர் உதவியாளராவதற்கு அடிப்படை தகுதியுள்ளவர்களை தெரிவு செய்து அவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதன்படி தோட்டப்புறங்களில் உள்ள தமிழ் பாடசாலைகள் மற்றும் தோட்டப்புறங்களைள அண்மித்த தமிழ் பாடசாலைகள் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரத்தில் வெளியிடப்படும். இரண்டு வாரங்களில் விண்ணப்பங்களை கோரி நேர்முகத்தேர்வை நடத்தி அதில் சித்தியடைபவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர்களாக நியமிக்கப்படுவர்.

அதன்பின்னர், நியமனம் வழங்குவதற்கான பட்டியலை மாகாண சபைகளுக்கு அனுப்பி 2,535 ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நியமனம் வழங்கப்படும் என்றார்.

## வெள்ளத்தில் வினோதமாக பயணித்தவர் மரணம்

வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளை பார்வையிட ஆற்றில் வினோதப் பயணம் சென்ற 22 வயதான தமித் குமார என்ற இளைஞன் பலியாகியுள்ளார்.

புளத்சிங்கள திவலகட பகுதியில் இடம்பெற்ற வெள்ள அர்த்தங்களை பார்ப்பதற்காக பிரதேச இளைஞர் குழு, ஆற்றில் படகு ஒன்றில் ஏறி வினோதமாக சென்று கொண்டிருக்கையில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

படகினை ஓட்டிச் சென்ற இளைஞர் தனது கையில் வைத்திருந்த மூங்கிலை உயர்த்தும்போது சக்தி வாய்ந்த மின்சாரக் கம்பி ஒன்றில் பட்டதால் அவர் ஆற்றில் தூக்கி வீசப்பட்டுள்ளார். அதன் பின் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு மரணமடைந்துள்ளார்.

இதேவேளை அப்படகில் பயணித்த மேலும் 19 இளைஞர்கள் மின்சாரத் தாக்கத்துக்கு உட்பட்ட போதிலும் அவர்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நகைக் கடை உரிமையாளர் கைது

■ பாறுக் ஷிஹான்




அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டிடம் கட்டடம் தொடர்பில் நகைக் கடை உரிமையாளர் பலத்தை எதிர்ப்பை தெரிவித்து வந்துள்ளார்.

இந்நிலையில், நிர்மாணப்பணிகளில் ஈடுபட்டுவந்த 18 வயது மதிக்கத்தக்க இளைஞன், நகைக்கடை உரிமையாளர் குழுவினரால் வியாழக்கிழமை(30) மாலை தாக்கப்பட்டிருக்கின்றார். தாக்குதலில் காயமடைந்த அவ்விளைஞன் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தானும் தாக்குதலுக்கு உள்ளானதாகக்கூறி, நகை கடை உரிமையாளர் கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய விசாரணைகளை மேற்கொண்டிருந்த பொலிஸார் மே மாதம் (31) மாலை இளைஞனை தாக்கிய நகைக்கடைக்காரரை கைது செய்துள்ளனர்.

அத்துடன் சிகிச்சை பெற்று வந்த இளைஞனை அவ்விடத்திற்கு சென்ற கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரசீட் முஹம்மது கலீல் பிணையில் செல்ல உத்தரவு பிறப்பித்திருந்தார்.

# குழந்தையை தாக்கிய சந்தேகநபருக்கு வலை

வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த 4 வயது குழந்தையை ஒருவர் கொடூரமான முறையில் தாக்கும் வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருவது குறித்து பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

பிபிலே சமிந்த எனப்படும் குகுல் சமிந்த என அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர் பதவிய சம்பதனுவர பகுதியைச் சேர்ந்தவர்.

குறிப்பிட்ட சந்தேகநபர் தனது வீட்டில் உணவருந்திக் கொண்டிருந்த குழந்தையை கொடூரமாக தாக்கும் வீடியோவை பக்கத்து வீட்டுக்காரரர் பதிவு செய்திருந்தார், இது சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டது.

இதற்கு முன்னரும் பல தடவைகள் இந்தக் குழந்தையை சந்தேக நபர் தாக்கியிருந்த போதிலும் அவருக்குப் பயந்து எவரும் பொலிஸாருக்கு அறிவிக்கவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட அதிகாரிகள் குழுவொன்று குறித்த வீட்டை சோதனையிட்டுள்ளனர். சந்தேக நபர் வீட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதுடன், அவரைக் கண்டுபிடிக்க பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.



## வடக்கு, கிழக்கு பகுதிகளில்

# “மறைமுக நிகழ்ச்சி நிரல்”

தமிழர்கள் வடக்கு,கிழக்கில் ஜனநாயக ரீதியாக அரசியல் செய்ய முடியாதவாறு புலனாய்வு பிரிவுகளினால் அச்சுறுத்தப்படுவதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம். பி.யான எஸ்.ஸ்ரீதரன் குற்றஞ்சாட்டினார்.

அங்கு, காணிகளை பறித்தல், அச்சுறுத்துதல்,கைது செய்தல், விசாரணைகளுக்கு அழைத்தல், அங்கு வாழும் மக்களின் எண்ணங்களை சிதைத்தல் என மறைமுக நிகழ்ச்சி நிரலை அரசாங்கம் முன்னெடுப்பதாக குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்ற மகளிர் வலிவூட்டல் சட்டமூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் பேசுகையில்,

தமிழ் இளைஞர்கள்,தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் தொடர்ந்தும் விசாரணைகளுக்கு உட்படுத்தப் படுகின்றார்கள். அச்சுறுத்தப்படுகின்றனர். தமிழர்கள் அவர்களின் தாயகப் பகுதியான வடக்கு,கிழக்கில் ஜனநாயக ரீதியாக அரசியல் செய்ய முடியாதவாறு ரி.ஐ.டி.,சி.ஐ.டி போன்ற பிரிவுகளை சேர்ந்தவர்கள் அதிகமான விசாரணைகளை மேற்கொண்டு அச்சுறுத்தி வருகின்றனர் அதேவேளை இன்னும் பலரின் பெயர்களையும் அவர்கள் விசாரணைகளுக்கு அறிவித்துமுள்ளனர்.

அவர்கள் சொல்லும் சுருக்கமான வசனம் விடுதலைப்புலிகளை மீள் உருவாக்கம் செய்கின்றார்கள் என்பது. இறந்துபோன ஆத்மாக்களை நினைவு கூர நாம் அனுமதிக்கின்றோம் என்று 2015



ஆம் ஆண்டு ஐ.நா. வில் அப்போதைய அரசு ஏற்றுக்கொண்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நீங்கள் வணக்கம் செலுத்த எந்த தடையும் இல்லை என எமக்கு உறுதியளித்திருந்தார். ஆனால், அன்றிலிருந்து இன்றுவரை வடக்கு,கிழக்கில் உள்ள பொலிஸாரும் புலனாய்வுத்துறையினரும் இடையூறுகளை ஏற்படுத்துவதுடன் விசாரணைகள், கைதுகளையும் மேற்கொள்கின்றனர். இதனால் தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் ,மக்கள் அச்சமடைந்துள்ளனர் என்றார்.

இதேவேளை மாவிட்டபுரத்திலுள்ள சித்தர்களின் வாழ்விடமான 105 பரப்பு காணியை ஒரு தனியாருக்கு வழங்குவதற்காக அதனை பறிப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது .அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றபோது நல்ல ஆதீனத்தை சந்தித்தபோதும் அங்கு சிவபூமி அறக்கட்டளை பணிப்பாளர் ஆறு திருமுருகனாலும் நல்லை ஆதீன முதல்வராலும் இந்தக்காணியை விடுவித்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோது விடுவிக்கிறேன் என உறுதியளித்துவிட்டு வந்த ஜனாதிபதி இதுவரையில் விடுவிக்க வில்லை என்றார்.



# மார்க் என்ட்ரோ மன்னாருக்கு விஜயம்

■ எஸ்.ஆர்.லெம்பேட்

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச் ( (Marc-Andro Franche) மன்னாருக்கான விஜயம் ஒன்றை செவ்வாய்க்கிழமை (04) மதியம் மேற்கொண்ட நிலையில் பல்வேறு சந்திப்புக்களை முன்னெடுத்துள்ளார்.

மன்னார் மனித உரிமை மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இதன் போது மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மேலும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன் மற்றும் ரனித்தா ஞானராஜ் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து மன்னார் நகர பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட சதோச மனித புதைகுழியையும் அவர் நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன் போது ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதி நிதி உள்ளிட்ட குழுவினருடன் மன்னார் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலைய பிரதிநிதிகள், மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா, மனித உரிமைகள் செயற் பாட்டாளர்களான சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன் மற்றும் ரனித்தா ஞானராஜ் ஆகியோரும் கலந்துக்கொண்டுள்ளனர்.



# ஒருவாரம் பூட்டு

தேசிய பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜூன் மாதம் 18ம் திகதி முதல் 24ம் திகதியான 7 நாட்களுக்கு மதுபானசாலைகள் மூடப்படவுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவிக்கின்றது.


அநுராதபுரம் மாவட்டத்தின் மத்திய நுவரகம, கிழக்கு நுவரகம மற்றும் மிஹிந்தலை ஆகிய மூன்று பிரதேச செயலக பிரிவுகளில் இவ்வாறு மதுபானசாலைகள் மூடப்படவுள்ளன.

# பேப்பர் கட்டரால் அறுத்த மாணவன்

கண்டி , ஹதரலியத்த பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் 12 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் இரு மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில், ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என ஹதரலியத்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை (31) அன்று பாடசாலை முடிந்து வீடு திரும்பும் வழியில் இருவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளதுடன் அதிலொருவர் தன்னிடமிருந்த பேப்பர் கட்டர் மூலம் 17 வயதுடைய மாணவனின் கையை அறுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவன் வீவலையை சேர்ந்தவர் என்றும், காயப்படுத்தியவர் துங்கும்புர பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவித்த பொலிஸார், குற்றஞ்சாட்டப்பட்ட மாணவனை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.



# தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

■ செ.திவாகரன்

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா பிரிவு தோட்ட தொழிலாளர்கள் செவ்வாய்க்கிழமை (04) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டுள்ளனர்.

களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்கு கீழ் இயங்கும் தலவாக்கலை நானுஓயா தோட்ட பிரிவில் ஓய்வு பெற்ற தொழிலாளர் ஒருவரை திங்கட்கிழமை (03) அன்று மீண்டும் பணிக்கு சமூகமளிக்க வேண்டும் என தோட்ட அதிகாரி கூறியுள்ளனர். அதனை மறுத்த தொழிலாளரை தகாத வார்த்தைகளால் தரக்குறைவாக பேசி அவரை தாக்க முற்பட்டுள்ளார். இதனால் தோட்ட மக்களுக்கும் தோட்ட நிர்வாகத்திற்கும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதற்கு எதிராகவும், மேலதிக நேரம் தொழில் செய்தாலும் உரிய கொடுப்பனவு கிடைப்பதில்லை எனவும், வேலை நாட்கள் குறைக்கப்படுவதாகவும் தோட்டத்தில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு



எவ்வித சலுகைகளும் கிடைப்பதில்லை,சிறிய தவறு செய்தாலும் கடுமையாக எச்சரிக்கின்றனர் எனத் தெரிவித்தும் தோட்ட அதிகாரிக்கு எதிர்ப்பு தெரிவித்துமே தொழிலாளர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# யானை தாக்கி ஒருவர் மரணம்

அநுராதபுரம், மதவாச்சி பிரதேசத்தில் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகிய மதவாச்சி பிரதேசத்தை சேர்ந்த 56 வயதுடையவர் உயிரிழந்துள்ள சம்பவம் திங்கட்கிழமை (03) மாலை இடம்பெற்றுள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனது காணிக்குள் சென்ற காட்டு யானையை விரட்ட முற்பட்ட போதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி, காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# காரைதீவில் சிரமதானம்

■ நூருல் ஹுதா உமர்

தேசிய சுற்றுச்சூழல் வாரத்தினை முன்னிட்டு ஜூன் 03 சுற்றாடல் தூய்மைப்படுத்தல் தினம் என்பதற்கமைய காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் சிரமதான நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது காரைதீவு-02, 03, 05 ம் பிரிவுகளின் தோணாவின் சூழலை தூய்மையாக்கப்பட்டதுடன் காரைதீவு-09 வெட்டு வாய்க்கால் முகத்துவாரப் பகுதியில் முறைகேடாக குப்பை கூழங்கள் கொட்டப்பட்டு மிகவும் மோசமான முறையில் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு காணப்படும் இடத்தினை தூய்மையாக்கல் சிறந்த முறையில் இடம்பெற்றது.

இதன்போது காரைதீவு பிரதேச சபை ஆளணியினர் மற்றும் வாகன வசதிகள் வழங்கி இருந்ததுடன் காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், காரைதீவு பிரதேச சபை, காரைதீவு சுகாதார வைத்திய





அலுவலகத்தினர், காரைதீவு பொலிஸ் நிலைய பொலிஸார் என பலரும் கலந்து கொண்டனர்.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) மற்றும் 9(2) ஆம் பிரிவின் கீழ் பின்வருமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சாரி ட்ரபர்ஸ் (பீவீட) எல்டீடி
பி வி 00295784
இல. 23/47, தியவன்னா கார்டன்ஸ், பகொடா வீதி, நுகேகொட.

யெபெகோ (பீவீட) எல்டீடி
பி வி 00298665
இல. 114, தக்ஷில உயன, மிதெல்லமுலஹேன, ஹொரண.

டியொன்எக்ஸ் (பீவீட) எல்டீடி
பி வி 00301663
இல. 44, பெத்தகன தெற்கு, பிடகோட்டே.

டெலி இனஃப்ரா சிஸ்டம்ஸ் (பீவீட) எல்டீடி
பி வி 00300711
இல. 44, பெத்தகன தெற்கு, பிடகோட்டே.

ஷிகா ட்ரை வித் ஏத் கம்பனி (பிரைவட்) லிமிட்டட்
பி வி 67779
இல. 35, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு 10

கம்பனியின் புதிய பெயர்
ஷிகா ட்ரை வித் ஏத் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்

**பணிப்பாளர்கள்**

# சுற்றுச்சூழலை பாதுகாப்போம்: நலமாய் வாழ்வோம்

சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் கடந்த சில பத்தாண்டுகளாகவே உலகம் முழுவதிலும் உணரப்படுகின்ற ஒன்றாக இருந்து வருகின்றது. மனித நடவடிக்கைகளால் சூழலில் ஏற்பட்டுவரும் விரும்பத் தகாத மாற்றங்களும், அதனால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளும், இது தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன.

உலக சூழல் தின நிகழ்வுகளின் முக்கியமான நோக்கம், உலகம் தழுவிய அளவில் சூழலின் முக்கியத்துவம் பற்றிய உணர்வை ஏற்படுத்துவதும், அரசியல் மட்டத்தில் கவனத்தை ஈர்த்து, உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தூண்டுவதுமாகும். அவை தொடர்பில் பல நாடுகள் பல்வேறு மட்டங்களில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றன. எனினும், அதன் பெறுபேறு குறைவாகவே உள்ளது.

நீதியான, தாங்குநிலை சார்ந்த வளர்ச்சியை ஏற்படுத்துவதில் மக்கள் தங்கள் நேரடியான பங்களிப்பைச் செலுத்துவதற்கு அவர்களை ஊக்குவித்தல் முக்கியமாகும்.

சூழல் தொடர்பான விடயங்களில், மக்களுடைய மனப்போக்கில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முக்கிய பங்காற்ற வேண்டிய பொறுப்பு சமுதாயங்களுக்கு உண்டு என்ற புரிந்துணர்வை உருவாக்குதல், பாதுகாப்பானதும்,வளமுள்ளதுமான எதிர்காலத்தை பல்வேறு நாடுகளிலும் வாழுகின்ற மக்கள் பெற்றுக்கொள்வதை உறுதி செய்வதற்காகக் கூட்டு முயற்சிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்தல் முக்கியமானதாகும்.

அதனடிப்படையில், உலக சுற்றுச்சூழல் நாள், ஐக்கிய நாடுகள் சபையால் ஆண்டுதோறும் ஜூன் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. சுற்றுச்சூழல் செயல்பாட்டைப் பற்றிய நேரடியான உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தக் கொண்டாடப்படுகிறது.

இது ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் சபையால் 1972 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இச் சபையின் சார்பில் இந்நாளின் கொண்டாட்டங்களுக்குப் பொறுப்பாக ஐக்கிய நாடுகள் சூழல் திட்டம் (UNEP) செயற்படுகின்றது.

உலகிலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இது தொடர்பான நிகழ்வுகள் நடைபெற்றாலும், ஒவ்வோர் ஆண்டிலும், முதன்மைக் கொண்டாட்டத்துக்கான இடமாக ஓர் இடம் தெரிவு செய்யப்படுவதும் வழக்கமாக உள்ளது.

சுற்றுச்சூழலை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில், பாடசாலை மட்டத்தில் இருந்து அல்ல, பாலர் பாடசாலையில் இரந்து விளிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என்பதை தெளிவுப்படுத்தவேண்டும். அதனால் எதிர்காலத்தில் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து விளங்கப்படுத்தவேண்டும் என்பதுடன், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் மரக்கன்றுகளை நடுதலை ஊக்குவிக்கவேண்டும்.

தேசிய சுதந்திர தினம், சுற்றாடல் தினம் உள்ளிட்ட முக்கியமான நாட்களில் மட்டுமன்றி, ஒவ்வொருவரின் பிறந்த நாளன்றும் மரக்கன்றுகளை நடுவதற்கும் அதனை பேணி பாதுகாப்பதற்கும் ஊக்குவிக்கவேண்டும். இந்த செயல் திட்டங்களை பாலர் பாடசாலை மட்டத்திலிருந்து ஆரம்பிப்பதே சிறந்த பணியாகும்.

இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது சிரமமாக இருக்கும் தங்களுடைய சுற்றுச்சூழலில் போதியளவில் இடமிருக்காது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொறுப்பான அரச நிறுவனங்களுடன் கலந்துரையாடி, காடுகளில் கன்றுகளை நடுகைச்செய்யலாம். பலம்தரும் மரக்கன்றுகளை நடுவதன் ஊடாக, எதிர்காலங்களில் பலனை பெறலாம் என்பது குறித்தும் விளிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக சுற்றுச்சூழலை பாதுகாத்து நலமாய் வாழ முடியுமென நாமும் வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

உண்மை பேசாதவர்கள் உளறிக் கொண்டே பேசுவார்கள். அவர்களின் அக உணர்வு உறுத்துவதால் பேச்சு சீராக இருக்காது.

உண்மை பேசுவது கடினமானதே இல்லை. சந்தோஷமான நிலைமையில் மனிதர்களை வைத்திருக்கும். மேலும் அச்சமே இல்லாத நிலையில், இவர்களின் வாழ்க்கையும் அதி உச்சகத்தில் வைத்துவிடும்.

உள்ளம் என்பது கூட உள்; “அகம்” வெளிப்படையாகப் பரந்தநிலையில் எம்மை உருவாக்கியப்படி அமைய வேண்டியதாகக் கருதவேண்டும்.

என்றும் நீதி நெறிதவறாது, உண்மையுடன் வாழ்ப்பாவர்களின் வகதங்களைப் பாருங்கள். அதில் ஓர் அழகு பளிச்செனத் தெரியும். இதுதே ஜஸ் எனப்படும் வியப்பான அழகு நிலை! இது ஒழுக்க வாழ்வின் முழுவடிவமாகும்.

உங்கள் ஜீவ சகியை பெருக்கிட பேசும் வார்த்தைகளில் தெளிவுடன் கூடிய நேர்மை துலங்கவேண்டும். இதனால் நெஞ்சத்தில் குளுமை தோன்றும். அதுவே சக்தியாக உருவாகி காரிய சக்திகளை உருவாக்கிவிடும்.

பருத்தியூர் பால-வயிரவநாதன்

# அடிக்கடி தலையைக் காட்டும் ஐதேகவின் தேர்தல் பீதி

எம்.எஸ்.எம்.ஐயூப்

சட்டப்படி இவ்வருடம் செப்டம்பர் மாதம் அல்லது ஒக்டோபர் மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாததால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அத்தேர்தலை ஒத்திவைக்கலாம் என்று கடந்த வருட ஆரம்பத்தில் இருந்தே பலர் மத்தியில் இருக்கும் சந்தேகத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஒரு கருத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார வெளியிட்டுள்ளார்.

ஐ.தே.க தலைமையகமான சிறிகொத்தவில் மே 28 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றிய ரங்கே பண்டார, குறைந்த பட்சம் இரண்டு வருடங்களுக்காவது ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக் காலத்தை நீடித்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அவகாசம் வழங்க வேண்டும் என்று கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும் செய்து கொள்ளப்பட்டு இருக்கும் உடன்படிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதிக்கு மேலும் இரண்டு வருடங்களாவது கொடுக்க வேண்டும். அதற்காக சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டுமாயின் அதனையும் நடத்த வேண்டும் என்று அவர் கூறியிருந்தார்.

அன்றே இந்தக் கூற்றுக்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியது. அத்தோடு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அவர் தலைமையிலான ஐதேகவின் ஏனைய சில தலைவர்களும் அக்கருத்தை நிராகரித்தனர். ஆயினும், தாம் தமது விருப்பத்தையே தெரிவித்தாகவும் அதற்கு அரசியலமைப்பில் தடை ஏதும் இல்லை என்றும் ரங்கே பண்டார கடந்த திங்கட்கிழமை கூறினார். அவரது வாயிலிருந்து வந்தாலும் இது அவரது எஜமானின் குரல் (his master’s voice) என்றே பலரும் நினைக்கின்றனர்.

அதாவது, தோல்விக்கு பயந்து தேர்தலை நடத்துவதா, இல்லையா, போட்டியிடுவதா, இல்லையா என்று இரு மனதுடன் இருக்கும் ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போடும் கருத்தை மற்றொருவர் மூலம் வெளியிட்டு அதற்கு வரவேற்பு இருக்கிறதா? என்று பார்க்கிறார் என்பதே பரவலான கருத்தாக இருக்கிறது.

அதற்கு வரவேற்பு இல்லை என்பது அன்றே விளங்கவே ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்ட படி நடக்கும் என்று ஜனாதிபதியும் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் கூறியிருந்தனர்.

ஆனால்? ஐ.தே.க இக்கருத்தை கடந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் கூறி வருகிறது என்பதை கருத்தில்கொள்ளும் போது இது ரங்கேயின் சொந்தக் கருத்து என்பதை நம்ப முடியாது. நாட்டை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்பதைப் பற்றி விக்ரமசிங்கவுடன் போட்டியிடப் போகும் ஏனைய கட்சித் தலைவர்களிடம் எவ்விதக் கருத்தும் இல்லாத நிலையில் விக்ரமசிங்கவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியின்றி தெரிவு செய்ய வேண்டும் என்று ஐ.தே.க தவிசாளர் வஜிர அபேவர்தன கடந்த வருடம் ஏப்ரல் மாதம் கூறினார்.

அதனை அடுத்து சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி 1982 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடித்துக்கொண்டதைப் போல் சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு தேர்தல் இல்லாமல் மேலும் 12 ஆண்டுகள் நாட்டை ஆள சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் கடந்த வருடம் ஜூன் 14 ஆம் திகதி காலியில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது கூறினார்.

ரணிலுக்கு மேலும் இரண்டு வருடங்கள் அல்ல, 12 வருடங்கள் வழங்க வேண்டும் என்று அன்று வஜிர தெரிவித்த கருத்துக்கு இப்போது போல் பாரிய எதிர்ப்பு தெரிவிக்கப்படவில்லை.

அதனை அடுத்து மீண்டும் கடந்த வருடம் ஒக்டோபர் 24 ஆம் திகதி கருத்து தெரிவித்த வஜிர, ஜனாதிபதித் தேர்தலுக்காக 1,300 கோடி ரூபாய் செலவாகும் என்றும் ஏனைய வேட்பாளர்கள் போட்டியில் இருந்து விலகி ரணிலை ஏகமனதாக ஜனாதிபதியாக தெரிவு செய்தால் அப்பணத்தை மின்சார கட்டணத்தை குறைக்கவும் ஏனைய நிவாரணங்களுக்காகவும் உபயோகிக்கலாம் என்றும் கூறினார்.

ஐதேகவின் தவிசாளரும் பொதுச் செயலாளரும் தேர்தலின்றி ரணிலின் பதவிக் காலத்தை நீடிக்க வேண்டும் என்று தொடர்ந்து தெரிவித்து வரும் கருத்தை கடந்த வாரம் வரை ஐதேகவின் எந்தவொரு தலைவரும் மறுக்காமை அக்கருத்து எங்கிருந்து வருகிறது என்பதை ஊகித்துக்கொள்ள எமக்கு உதவுகிறது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ரணிலைத் தவிர வேறு எவரும் இல்லை என்று உண்மையிலேயே ஐ.தே.க தலைவர்கள் நம்பி இவ்வாறான கருத்துக்களை வெளியிடவில்லை. எதிர்வரும் தேர்தல்களில் தமது கட்சி தோல்வியடையும் என்ற பயமே அவர்கள் இக்கருத்துக்களை வெளியிடுவதற்கான உண்மையான காரணமாகும்.

ரணில் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் பொருளாதார நிலைமை சற்று சீரடைந்ததைப் போல் தெரிகிறது என்பது உண்மைத் தான். ஆனால் அது பொருளாதார மீட்சியும் அல்ல. அதற்கு காரணம் ரணிலும் அல்ல. உண்மையிலேயே என்ன நடந்திருக்கிறது என்றால் பொருளாதாரத்தை மிக மோசமாக அழித்தவரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே சர்வதேச நாணய நிதியத்துடன் அரம்பித்த வேலைத்திட்டத்தின் காரணமாக கடந்த வருடம் மார்ச் மாதத்திலிருந்து அந்நிதியத்திடமிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் ஒரு பில்லியன் டொலருக்கு மேல் கடன் கிடைத்திருக்கிறது.

இந்தியா தவிர வேறு எவருமே உதவியளிக்காதிருந்த இலங்கைக்கு அதன் மூலம் எரிபொருள் மற்றும் எரிவாயு கொள்வனவு செய்ய முடிந்தது. அதன் காரணமாக எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கான வரிசைகளை முடிவுக்கு கொண்டுவர முடிந்தது. எரிபொருள் தட்டுப்பாடு நீங்கவே போக்குவரத்தும் ஓரளவுக்கு சீரடைந்து பொருட்களுக்கான தட்டுப்பாடும் ஓரளவுக்கு தீர்ந்தது. அதைத் தவிர 2022 ஆம் ஆண்டு மும்மடங்காக ஏறிய பொருட்களின் விலை இதுவரை குறையவில்லை. எதிர்க்காலத்தைப் பற்றிய மக்களின் அச்சமும் நீங்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக சர்வதேச நாணய நிதியம் தற்காலிகமாக பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்துகொள்ள உதவுகிறதேயல்லாமல் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கத்தை வழிநடத்துவதில்லை. எனவே, முன்னர் பெற்ற கடன்களையும் நாணய நிதியத்தின் உதவியில் தற்போது பெறும் கடன்களையும் திருப்பிச் செலுத்தும் வழிமுறைகளை இலங்கை ஆட்சியாளர்களே கண்டுபிடிக்க வேண்டும். அரசாங்கத்திடம் அவ்வாறானதொரு திட்டம் இல்லை. ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் மூலம் அதனைச் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி அடிக்கடி கூறுகிறார். அது பாடப்புத்தகங்களில் இருக்கும் கருத்தாகும். குறிப்பிட்ட திட்டமொன்றை அது குறிக்கவில்லை.

2022 ஆம் ஆண்டில் எந்தவொரு நாடும் எந்தவொரு வெளிநாட்டு நிறுவனமும் இலங்கை அரசாங்கத்துக்கு கடன் வழங்காத நிலைமையே இருந்தது. எனவே எவர் அதிகாரத்தில் இருந்தாலும் சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கேட்பதைத் தவிர அரசாங்கத்துக்கு வேறு வழியே இருக்கவில்லை. அதன் பிரகாரம் அந்நிதியம் இலங்கைக்காக ஒரு திட்டத்தை தயாரித்துள்ளது. எவர் அதிகாரத்தில் இருந்தாலும் அதனூடாக பொருளாதாரத்தை ஓரளவுக்கு முகாமைத்துவம் செய்துகொள்ள வேண்டும். அந்தக் கட்டத்தைத் தான் நாம் தற்போது கடந்து செல்கிறோம்.

தேர்தல் மூலம் மற்றொரு கட்சி பதவிக்கு வந்தால் நாணய நிதியத்தின் இந்தத் திட்டம் சீர்குழைந்துவிடும் என்றும் எனவே, தேர்தலின்றி ரணிலுக்கே மீண்டும் அதிகாரத்தை வழங்க வேண்டும் என்பதும் ஐ.தே.க தலைவர்களின் மற்றொரு வாதமாகும். ஆயினும் அதுவும் தவறான வாதமாகும். ஏனெனில் தற்போதைய நிலையில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க அல்லது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும்.

அக்கட்சிகளில் ஐக்கிய மக்கள் சக்தியானது நாணய நிதியத்தை அணுகி உதவி கேட்க வேண்டும் என்று கோட்டாபய ராஜபக்ஷ அந்நிதியத்தை அணுக முன்னரே கூறி வந்த கட்சியாகும். அதேபோல் அக்கட்சியானது ஐதேகவிலிருந்து பிரிந்த கட்சியாகும். அதன் தலைவர்கள் கொள்கை வேறுபாடு காரணமாக அவ்வாறு ஐதேகவிலிருந்து பிரியவில்லை. ரணிலின் தலைமையில் தேர்தல்களில் வெற்றி பெற முடியாது என்று கூறியே அவர்கள் பிரிந்து சென்றார்கள். எனவே சஜித் பிரேமதாச, நாணய நிதியத்தின் இலங்கைக்கான திட்டத்தை மாற்றப் போவதில்லை.

அண்மையில் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றின் போது கருத்து தெரிவித்த அனுரகுமார திஸாநாயக்க, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஆரம்பத்திலேயே நாணய நிதியத்திடம் செல்லாது வேறு வழிகளில் முயற்சிகளை மேற்கொண்டு இருக்கலாம் என்றும் ஆயினும் தற்போது அந்நிதியத்தின் திட்டத்தை மாற்ற முடியாது என்றும் கூறினார். எனவே நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ரணில் தான் இருக்க வேண்டும் என்று கூற முடியாது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் ஒரு நாடு ஜனாதிபதித் தேர்தலுக்காக 1300 கோடி ரூபாய் செலவழிப்பது முறையாகாது என்று ஐதேக தலைவர்கள் வாதிடுகிறார்கள். எனினும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப் போடுவதாக இருந்தால் அதற்காக அரசியலமைப்பை திருத்த வேண்டும். அத்திருத்தம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் மக்களின் ஒப்புதலையும் பெற வேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்பும் நாடு முழுவதிலும் நடைபெறும் வாக்கெடுப்பு என்பதால் அதற்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான செலவுத் தொகையையே செலவழிக்க வேண்டும். அந்த வாக்கெடுப்பில் அரசாங்கம் தோல்வியடைந்தால் அதன் பின்னர் மற்றுமொரு தொகை பணத்தை செலவழித்து ஜனாதிபதித் தேர்தலையும் நடத்த வேண்டும். எனவே ஐதேகவின் ஆலோசனை எவ்வகையிலும் பொருத்தமற்றதாகும்.

## கடிதங்கள்

### கால்நடைகள் உயிரிழக்கின்றன



கொத்மலை பூண்டுலோ கைப்புகலை பகுதியில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஒருவாரமாக அவர்கள் வளர்க்கும் மாடுகளின் உடம்பில் கொப்பளங்கள் உருவாகி உடைந்து காயங்கள் ஏற்பட்டுள்ளதால் மாடுகள் இறக்க உயிரிழக்ககூடிய நிலையில் காணப்படுகிறது.

அத்தோடு சிகிச்சை வழங்குவதற்கு அதிக பணம் செலவழித்தும் இதுவரை மாடுகள் நோயில் இருந்து. காப்பாற்றப்படவில்லை. என பண்ணையாளர்கள் கவலை அடைகின்றனர்.

இந்த நோயின் காரணமாக பால் உற்பத்தி குறைந்துள்ளதால் குடும்ப வருமானமும் குறைந்துள்ளது. அரச வைத்தியர்கள் வருகை தந்து சிகிச்சை மாடுகளுக்கு வழங்கினாலும் அதற்கான கட்டணத்தையும் மருந்துகளுக்கான செலவுகளையும். செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது

எனவே அரச அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்தி பண்ணையாளர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி நோயினால் பிரிக்கப்பட்டிருக்கின்ற மாடுகளையும் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இங்குள்ள மக்களின் எதிர்பார்பாக இருக்கின்றது.

-துவாரகஷான்

## கொடியேற்றம்...

கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய திருவிழா திங்கட்கிழமை (03) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ஆலய திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி மிக விமர்சையாக கொண்டாடப்படவுள்ளது.













# உலக சுற்றுச்சூழல் தினம்

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5ம் திகதி உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. பெருகிவரும் மக்கள் தொகையாலும் தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் வாகனப் புகையாலும் சுற்றுச்சூழல் வெகுவாக பாதிக்கப்படுவதை விஞ்ஞானிகள் அறிவுறுத்துவது ஒரு புறம் இருந்தாலும், ஒவ்வோர் ஆண்டும் சுழவரும் கத்தரி வெயிலின் தாக்கமும், திடீரென்று பெய்யும் பேய் மழையும், அதனால் விளையும் பெருவெள்ளமும் இயற்கையில் ஏதோ ஒழுங்கற்ற தன்மை உருவாகி வருவதை சூசகமாக உணர்த்துகின்றன.

மக்கள்தொகை அளவுக்கு அதிகமாகப் பெருகியதால் இயல்பாகவே தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்கள் பெருகின. இதன் கழிவுகள் அனைத்தும் காற்றுமண்டலத்திலும், நிலத்திலும், ஆறு, கடல்களிலும் கலந்து சுற்றுச்சூழலை மாசடையச் செய்துவருகின்றன. எனவே, நாம் சுற்றுச்சூழலைக் காப்பதற்கு முதன்மையாக செய்யவேண்டியது மக்கள்தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதும், இதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்த வேண்டியதுமே ஆகும்.

உலக வெப்பமயமாதல் எனும் பிரச்சனையால் பனிப்பாறைகள் உருகி கடல்மட்டம் உயரும் என்று சொல்லப்படுகிறது. நிலத்தடி நீர் பற்றாக்குறையால் தண்ணீர் பஞ்சமும் இந்தியாவின் பல இடங்களில் அதிகரிக்கத் துவங்கியுள்ளன. சுற்றுச்சூழலின் நலனை சீர்தூக்கிப் பார்த்து, இந்த பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வு காண்பது குறித்து சிந்தித்து செயலாற்றுவதற்கான ஒரு நாளாகவே இந்த உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படுகிறது.

சுற்றுச்சூழலைக் காக்க இந்த உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் முன்வர வேண்டும். இந்த உலகில் மனிதன் மட்டும்தான் உள்ளானா? ஏன் விலங்குகளும் பறவைகளும் கூட வாழ்கின்றன. அவைகள் ஏதும் செய்யக்கூடாதா என மனிதர்கள் கேட்பதற்கு நியாயமில்லை. ஏனெனில், மனித இனத்தை தவிர வேறெந்த உயிரினத்தாலும் சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை.

## முன்னோர்களின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

நம் முன்னோர்கள் சுற்றுச்சூழல் குறித்த பெரும் அறிவையும் விழிப்புணர்வையும் கொண்டிருந்தனர் என்பதற்கு இலக்கியங்களில் கூட பல ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக நிலத்தை ஐவகை திணைகளாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பிரித்து, அங்கு வாழும் மக்களுக்கு ஏற்ப தொழில்கள், கலாச்சாரங்கள், கடவுள்கள் என வகுத்து முறையானதொரு வாழ்வை மேற்கொண்டனர். உதாரணமாக மலையும் மலை சார்ந்த இடம் குறிஞ்சி என்றால் மலையையே அவர்கள் கடவுளாகத்தான் பார்த்தார்கள். கடலும் கடல்சார்ந்த இடம் நெய்தல் என்றால் கடலை தேவதையாக வழிபட்டனர். நம்மைச் சுற்றியிருக்கும் நம் நிலத்தையும், நீரையும், காற்றையும் நம் வாழ்க்கையின் மிக உயரிய அங்கமாகக் கருதி வழிபட்டதால், அதனை மாசுபடுத்தாமல் பாதுகாக்க வேண்டும் என்ற மனநிலை இயல்பிலேயே இருந்தது.

குறைந்தபட்சம் 166 பயிரினங்கள் நமது நாட்டில் உண்டு. நெற்பயிரில் மட்டும் 50,000 இனங்கள் உண்டு. சோளத்தில் 5000 ரகம் உண்டு. மிளகுப் பயிரில் 500 வகையும் மாமரத்தில் 1000 வகையும் உண்டு. ஒவ்வொரு விலங்கினத்திலும் பலவகை உண்டு. வெள்ளாட்டில் 20 வகை, செம்மறியில் 42 வகை, எருமையில் 15 வகை, கால்நடையில் 30 வகை, கோழியில் 18 வகை, இப்படியாக சூழல் அமைப்புக்கு ஏற்ப மனித உதவியின்றியே இவை பரிணமித்துள்ளன. இந்த உயிரினங்களில் மனிதன் கோடியில் ஒரு துளி. இத்தனை உயிர்களுக்கும் இங்கு வாழ உரிமையுண்டு.

மனிதனோ பூமி தனக்கு மட்டுமே சொந்தம் என எண்ணிக்கொள்கிறான்.

இந்த நிலை மாறவேண்டுமானால், முதலில், மனிதனின் மனநிலையில் ஒரு மாற்றமும் புரிதலும் தேவைப்படுகிறது. மற்ற உயிர்களைப் பற்றி சிந்திக்கும் தன்மையும் உணர்வும் மனிதனின் உள்நிலையில் அவசியமாகிறது.

இன்றைய மனிதனோ அனைத்தையும் வணிகப் பொருளாக பார்க்கத் துவங்கிவிட்டான். நிலமும், நீரும் தற்போது முற்றிலும் வணிகமயமாகிவிட்டன. நாம் சுவாசிக்கும் காற்றும் கூடிய விரைவில் கடைத்தெருக்களில் சிலிண்டர்களில் விற்பனைக்கு வந்துவிடுமோ என்ற அச்சம் இல்லாமல் இல்லை. இந்நிலைக்குக் காரணம் என்ன என்பதை சற்று ஆராய முற்பட்டோமானால், முதற்காரணமாக நம்முன்னே தெரிவது மக்கள்தொகை பெருக்கம்தான். சுதந்திரம் பெறும் தருணத்தில் 33 கோடியாக இருந்த நம் எண்ணிக்கை, மூன்று மடங்கிற்கு மேல் தற்போது பெருகியுள்ளதைப் பார்க்கிறோம். இந்நிலை நீடித்தால் இன்னும் சில ஆண்டுகளில் நிலம், நீர், காற்று மட்டுமல்ல, ஆகாயமும் கூட நமக்கு போதாமல் போய்விடக்கூடிய சூழல் ஏற்பட்டுவிடும்

மக்கள்தொகை அளவுக்கு அதிகமாகப் பெருகியதால் இயல்பாகவே தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்கள் பெருகின. இதன் கழிவுகள் அனைத்தும் காற்றுமண்டலத்திலும், நிலத்திலும், ஆறு, கடல்களிலும் கலந்து சுற்றுச்சூழலை மாசடையச் செய்துவருகின்றன. எனவே, நாம் சுற்றுச்சூழலைக் காப்பதற்கு முதன்மையாக செய்யவேண்டியது மக்கள்தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதும், இதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்த வேண்டியதுமே ஆகும்.

அடுத்த படிகளாக, நாம் ஒவ்வொருவரும் இந்த காற்று மண்டலத்தில் பதிக்கும் கார்பன் கால்தடங்களை குறைக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் குறிப்பிட்ட அளவு கார்பனை வளிமண்டலத்தில் கலக்கச் செய்கிறான். தற்போது உள்ள நிலவரப்படி கணக்கிட்டால், நாம் எடுத்துக்கொள்ளும் ஆக்ஸிஜனுக்கு ஈடுசெய்து நாம் விட்டுச் செல்லும் 'கார்பன்' கால் தடங்களைக் குறைக்கும் விதமாக ஒவ்வொருவரும் குறைந்தது 5 மரக்கன்றுகளாவது நடவேண்டும்.

பொதுவாக, ஒரு வளர்ச்சியடைந்த மரமானது, நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு தேவையான 260 பவுன்ட் அளவு ஆக்ஸிஜனை உற்பத்தி செய்கின்றது.

பொதுவாக நாம் மகிழ்வுந்து, இருசக்கர வாகனம் என ஆளுக்கொரு வாகனத்தில் பயணிக்கிறோம். 100 பேர் 100 வாகனங்களில் செல்வதற்கு பதிலாக அனைவரும் ஒரு





பேருந்தில் பயணம் செய்தால் கூடுதலாக 99 வாகனங்கள் புகை கக்குவதைத் தடுக்க முடியும் அல்லவா?! அதேபோல் புகை கக்கும் வாகனங்களுக்கு பதிலாக மிதிவண்டியை கூடுமானவரை பயன்படுத்தலாம். இதனால் உடலும் ஆரோக்கியத்துடன் இருக்கும்.

செய்தித்தாள் ஒன்றை, 9 முறை மறுசுழற்சி செய்யமுடியும் என்று சொல்கிறார்கள். எனவே, படித்துவிட்டு செய்தித்தாளைக் கீழே வீசவேண்டாம். 1 மீட்டர் உயரத்துக்கு அடுக்கப்பட்டுள்ள செய்தித்தாள்களை மறுசுழற்சி செய்வதன் மூலம் 7 மீட்டர் உயரமுள்ள மரம் வெட்டப்படுவதைத் தவிர்க்கலாம் என சொல்லப்படுகிறது. எளிமையான வாழ்க்கை என்பது சுற்றுச்சூழலைக் காப்பதற்குத் துணைநிற்கும்.

மறுசுழற்சி, மறு பயன்பாடு என்ற மனப்போக்கை வளர்த்துக்கொள்வது அவசியமாகிறது. காடுகளை அழிப்பதில் பேப்பர்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. ஆகவே, பேப்பர்களைப் பயன்படுத்தும்போது நிதானமாகச் செயல்படுவது நல்லது. தட்டச்சு செய்யும்போது இரண்டு பக்கங்களிலும் செய்யலாம்.

இன்று எளிதாகக் கிடைக்கக்கூடிய உலோகம் அலுமினியம். சிகரெட் பாக்கெட்டில் இருக்கும் அலுமினியத் தாள்கள், பாட்டில் மூடிகள், மாத்திரைகள் இருக்கும் அலுமினிய அட்டைகள், பழைய பாத்திரங்கள் ஆகியவை மீண்டும் பயன்படும் புதிய பொருட்களாக மாற்றப்படலாம். இவற்றை சேமித்து வைத்து, சேகரிப்பவரிடம் கொடுக்கலாம்.

உலக சுற்றுச்சூழல் தினம் - மேற்கொள்ள வேண்டிய உறுதிகள்

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு நாம் செய்ய வேண்டியது என்னென்ன எனப் பார்த்தால், அதில் முக்கியமானது குறைந்தபட்சம் ஆளுக்கொரு மரம் நடுவது. அடுத்தபடியாக, தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துவது. இயற்கை விவசாய முறைகளைக் கையாளுதல்; வீடுகளில் மழைநீர் சேகரிப்பு தொட்டிகளை அமைத்தல் போன்றவற்றை சொல்லலாம்.

தவிர்க்க வேண்டியதென்று பார்த்தால், அத்தியாவசிய தேவைக்குத் தவிர மற்ற நேரங்களில் மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்தாமல் இருப்பது. அதற்குப் பதிலாக மிதிவண்டிகளைப் பயன்படுத்தப் பழகினால், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதோடு உடல்நலமும் மேம்படும் வாய்ப்புள்ளது. வீட்டிலிருந்து புறப்படும் முன், மின்சாதன பொருட்களை அணைக்காமல் செல்லுதல் போன்ற சின்னச் சின்ன செயல்களையும் நாம் கவனித்து தவிர்க்கத் தேவையுள்ளது.

## புகைபிடித்தலைத் தவிர்க்கலாம்.

அது புகைப்பவரின் உடல்நலத்திற்கு மட்டுமல்லாமல் உடனிருப்பவருக்கும் தீங்கை விளைவிக்கும். ஆண்டுதோறும் அமெரிக்காவில் புகை பிடிக்காத 4,000 பேர் புற்றுநோய் வந்து இறக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. கண்ணாடி, மண்ணோடு மக்க குறைந்தது 100 ஆண்டுகள் ஆகும். எனவே, கண்ணாடியை மறுபயன்பாட்டுக்கும், மறுசுழற்சிக்கும் அனுப்பவேண்டும். நெகிழி எனப்படும் பிளாஸ்டிக் என்பது மண்ணில்





மக்கக்கூடியதே அல்ல. ப்ளாஸ்டிக் பைகளை பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்ப்பது சுற்றுச்சூழலுக்கு மிகவும் அவசியமானதாகிறது. பிளாஸ்டிக்கால் ஆன பொருட்களைக் கீழே வீசாமல் மறுபயன்பாட்டுக்கும், மறுசுழற்சிக்கும் அனுப்பலாம். பொருட்களை வாங்க கடைக்குச் செல்லும்போது, வீட்டில் இருந்தே பை எடுத்துச் செல்லலாம்.

2018ம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தில் ஈஷா அறக்கட்டளையும், நதிகளை மீட்போம் இயக்கமும் ஐநா சுற்றுச்சூழல் அமைப்புடன் இணைந்து, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தி தூக்கியெறியும் பிளாஸ்டிக் பயன்பாட்டினை தடைசெய்வதற்கான முன்னெடுப்புகளை முன்னின்று நிகழ்த்தின.

பசிபிக் பெருங்கடல் பகுதியில் உள்ள மிட்வே அடோல் தேசிய வனவிலங்கு சரணாலயத்தில் கடந்த செப்டம்பர் 2009ல் இறந்த அல்பட்ரோஸ் வகை கடல்பறவை குஞ்சின் இரைப்பை பகுதி புகைப்பட கலைஞரால் படம்பிடிக்கப்பட்டது. அதில், அதன் தாய் பறவையால் பிளாஸ்டிக் கழிவுகள் அந்தக் குஞ்சுக்கு ஊட்டப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

## இயற்கை விவசாயத்தின் அவசியம்

இரசாயன விவசாயத்தால் மண்வளம் பாதிக்கப்படுவதோடு சுற்றுச்சூழலும் மனித ஆரோக்கியமும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் இயற்கை விவசாய நுட்பத்தைக் கடைபிடிப்பதே இதற்கான தீர்வாக இருக்கும்.

இரசாயன உரங்களைத் தவிர்த்து, கால்நடை எரு, பஞ்சகாவியம் போன்ற இயற்கை ஊக்கிகளைப் பயன்படுத்தி இயற்கை முறையில் பயிர் சாகுபடி செய்வதன்மூலம், மண்வளமும் மனித ஆரோக்கியமும் பாதிக்கப்படுவது தவிர்க்கப்படும்.

தற்போது ஈஷா விவசாய இயக்கம், இயற்கை வேளாண் வித்தகர் திரு.சுபாஷ் பாலேக்கர் அவர்களின் வழிகாட்டுதலில் தமிழகம் முழுவதும் இயற்கை விவசாயத்தை கொண்டு சேர்க்கின்றது. விவசாயிகளுக்கு இயற்கை விவசாயத்திற்கான பயிற்சியளித்து, இயற்கையின் பக்கம் திரும்பி வருகின்றனர்.

ஆந்திரா

ஆந்திராவில் எதிர்க்கட்சி தலைவராகும்

# பவன் கல்யாண்



ஆந்திராவில் ஜெகனின் வைஎஸ்ஆர் காங்கிரஸை விட நடிகர் பவன் கல்யாணின் ஜனசேனா கட்சி அதிக இடங்களில் முன்னிலை பெற்று இரண்டாவது பெரிய கட்சியாக உயர்ந்துள்ளது.

நடிகரும், ஜனசேனா கட்சி நிறுவனருமான பவன் கல்யாண், ஆந்திராவில் உள்ள பிட்டாபுரம் சட்டமன்றத் தொகுதியில் வலுவான முன்னிலையுடன் தனது முதல் தேர்தல் வெற்றி பெற்றுள்ளார்.

முதல்முறையாக ஆந்திர சட்டப்பேரவைக்குள் உறுப்பினராக நுழையவிருக்கும் பவன் கல்யாண் அநேகமாக எதிர்க்கட்சித் தலைவர் ஆவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

2016 தமிழக சட்டப்பேரவை தேர்தலில் ஜெயலலிதாவின் அதிமுகவுடன் கூட்டணி அமைத்து வெற்றிபெற்று தேமுதிக தலைவர் விஜயகாந்த் எதிர்க்கட்சி தலைவர் ஆனார். தற்போது அதேபோன்ற நிலைமை பவனுக்கு ஏற்பட்டுள்ளது. வைஎஸ்ஆர் காங்கிரஸை விட அதிக இடங்களை கைப்பற்றுவதன் மூலம் முதல் முறை சட்டப்பேரவைக்கு நுழையும்போதே அவர், எதிர்க்கட்சித் தலைவராக நுழைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நடிகர் சிரஞ்சீவியின் சகோதரரும், ஜனசேனா கட்சியின் தலைவரும். நடிகருமான பவன்கல்யாண், இம்முறை தெலுங்கு தேசம், பாஜகவுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்துள்ளார். கடந்த முறை இவர் தனியாக போட்டியிட்டதின் விளைவாக, தெலுங்கு தேசம் கட்சியின் 6 சதவீத வாக்குகள் சிதறின.

இதனால், ஜெகன்மோகன் ரெட்டி அதே 6 சதவீத வாக்குகள் வித்தியாசத்தில் ஆட்சி அமைத்தார்.

தொகுதி பங்கீட்டில் தெலுங்கு தேசம் கட்சிக்கு 144 சட்டமன்ற மற்றும் 17 மக்களவைத் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன, பாஜக ஆறு மக்களவை மற்றும் 10 சட்டமன்றத் தொகுதிகளிலும், பவன் கல்யாணின் ஜனசேனா கட்சிக்கு, 2 மக்களவை, 21 சட்டப்பேரவை தொகுதிகளும் ஒதுக்கப்பட்டது.

இதில் பவன் கல்யாண் கோதாவரி மாவட்டத்தில் உள்ள பிட்டாபுரம் சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிட்டார். கடந்த 2019இல் இவர் போட்டியிட்ட 2 தொகுதிகளிலும் தோல்வியை சந்தித்தார். ஆனால், இம்முறை வெற்றியை ருசித்துள்ளார்.

ஆந்திரா

ஆந்திரா ஆட்சியை கைப்பற்றிய

## சந்திரபாபு நாயுடு



சட்டசபை தேர்தலில் தெலுங்கு தேசம், பா.ஜ., ஜனசேனா கூட்டணி கட்சிகள் தொடர்ந்து முன்னிலை வகிக்கித்த நிலையில், இக்கூட்டணி ஆட்சி அமைப்பது உறுதியாகியுள்ளது.

மேலும், சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் மட்டும் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க உள்ள நிலையில், ஜூன் 9இல் அவர் முதல்வராக பதவியேற்க உள்ளார். அவருக்கு பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தனர்.

ஆந்திரா மாநிலத்தில் உள்ள 175 சட்டசபை தொகுதிகளுக்கு கடந்த மே 13ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடந்தது. பா.ஜ., மற்றும் பவன் கல்யாண் கட்சியுடன் இணைந்து தெலுங்கு தேச கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு களத்தில் இறங்கினார்.

ஜெகன் மோகன் ரெட்டி தலைமையிலான வை.எஸ்.ஆர். காங்கிரஸ் மற்றும் காங்கிரஸ் கட்சி போட்டியிட்டன. இதில் தெலுங்கு தேசம் கட்சி மட்டும் 130 இடங்களுக்கு மேல் முன்னிலை வகித்ததையடுத்து அக்கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கின்ற நிலையில், ஜூன் 9இல் சந்திரபாபு நாயுடு முதல்வராக பதவியேற்க உள்ளார்.

மேலும், கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் மொத்தமுள்ள 175 தொகுதிகளில் 151 தொகுதிகளில் வெற்றி பெற்று பெரும்பான்மையுடன் ஜெகன் மோகன் ரெட்டி ஆட்சியைப் பிடித்தார். சந்திரபாபு நாயுடு கட்சியால் வெறும் 23 தொகுதிகளில் வெல்ல முடிந்த நிலையில், காங்கிரஸ் மற்றும் பா.ஜ.,வால் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெற முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடி

மீண்டும் எம்.பியாகும்

## கனிமொழி



18ஆவது மக்களவைத் தேர்தல் இந்தியா முழுவதும் ஒவ்வொரு மாநிலமாக 7 கட்டங்களாக நடைபெற்ற நிலையில் தேர்தலில் பதிவான வாக்கு முடிவுகள் வெளியாகி வருகின்றன

இதில், திமுக கூட்டணி அதிகப்படியான இடங்களில் முன்னிலை வகித்ததால் திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் திமுகவினர் பட்டாசு வெடித்து, இனிப்புகளைப் பகிர்ந்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் தூத்துக்குடியில் திமுக வேட்பாளர் கனிமொழி வெற்றிமுகம் கண்டுள்ளார். ஏற்கனவே அவர் தொடர்ந்து முன்னிலையில் இருந்து வந்த நிலையில் இறுதியாக, தூத்துக்குடி மக்களவை தொகுதியில் அவர் வெற்றி கண்டுள்ளார்.

காசா

பலஸ்தீனத்தை அங்கீகரிக்க

## கூட்டாக வேண்டுகோள்



ஐக்கிய நாடுகளின் 146 நாடுகளை பின்பற்றி ஏனைய நாடுகளும் பலஸ்தீனத்தை அங்கீகரிக்கவேண்டும் என ஐக்கியநாடுகளின் நிபுணர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதேசமயம், காசாவில் உடனடி யுத்த நிறுத்தத்தை கொண்டுவருவதற்காக நாடுகள் தங்கள் அரசியல் இராஜதந்திர வளங்களை பயன்படுத்தவேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், பலஸ்தீனத்தை அங்கீகரிப்பது என்பது பலஸ்தீன மக்களின் உரிமைகளை அவர்களின் போராட்டங்களை சுதந்திரம், விடுதலைக்கான அவர்களின் துயரங்களை அங்கீகரிப்பதாகும் என ஐநா நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பலஸ்தீனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும் என்பதோடு, பலஸ்தீனத்திலும் மத்திய கிழக்கிலும் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கான முன்நிபந்தனை இதுவென ஐநா நிபுணர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி

ஜேர்மனியில் சில பகுதிகளில்

## அவசரகால நிலை அறிவிப்பு

ஜேர்மனியில் நிலவும் சீரற்ற காலநிலையால் சில பகுதிகளில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனின் பவேரியா, பேடன் வுர்ட்டம் பேர்க் மாகாணங்களில் தொடர்மழை பெய்து வருகிறது. இதனால் டோனாவ், நெக்கர், குயென்ஸ் உள்ளிட்ட பல நகரங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

சில ஆறுகளில் நீர்மட்டம் உயர்ந்து வருவதுடன், வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதால் அங்குள்ள 10 மாவட்டங்களுக்கு அவசரகால நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் வெள்ளத்தில்

## பல்லாயிரக் கணக்கான சிறுவர்கள் பாதிப்பு



ஆப்கானிஸ்தானில் கடந்த மாதம் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் பல இடங்களில் வெள்ளம் மக்களையும் வீடுகளையும் அடித்துச் சென்றது. இதில், 300 பேர் உயிரிழந்தனர். மேலும், பருவநிலை தவறி பெய்த மழையால், நாட்டின் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியமான யுனிசெப் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘மோசமான வானிலையால் பருவநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வெள்ளம், வறட்சி ஏற்படுகிறது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் கடந்த ஆண்டு கடுமையான வறட்சி நிலவியது. இந்த வெள்ளம் காரணமாக பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இருபதுக்கு –20 உலகக் கிண்ணம்:

# தென்னாபிரிக்காவிடம் தோற்றது இலங்கை

### ஆப்கானிஸ்தானிடம் மண்டியிட்ட உகண்டா



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அமெரிக்காவின் நியூ யோர்க்கில் திங்கட்கிழமை (03) நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான குழு டி போட்டியில் இலங்கை தோற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் வனிடு ஹசரங்க தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, அட்னைல் பட்மன், அன்றிச் நொர்கியா (4), கேஷவ் மஹராஜ் (2), ககிஸோ றபாடாவிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 77 ஓட்டங்களையே பெற்றது.

பதிலுக்கு 78 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, நுவான் துஷார, தசுன் ஷானக, ஹசரங்கவிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோதும் 16.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக நொர்கியா தெரிவானார்.

இந்நிலையில், கயானாவில் செவ்வாய்க்கிழமை (04) காலை நடைபெற்ற உகண்டாவுடனான குழு சி போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:


நாணயச் சுழற்சி: உகண்டா

ஆப்கானிஸ்தான்: 183/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 76 (45), இப்ராஹிம் ஸட்ரான் 70 (46) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரியன் மசபா 2/21 [4], கொஸ்மாஸ் கையெவுட்டா 2/25 [4])

உகண்டா: 58/10 (16 ஓவ. ) (பந்துவீச்சு: பஸல்ஹக் பரூக்கி 5/9 [4], நவீன்-உல்-ஹக் 2/4 [2], ரஷீட் கான் 2/12 [4], முஜீப் உர் ரஹ்மான் 1/16 [3], அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 0/7 [2], மொஹமட் நபி 0/8 [1])

போட்டியின் நாயகன்: பஸல்ஹக் பரூக்கி

இதேவேளை, நியூ யோர்க்கில் இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஏ போட்டியில் அயர்லாந்தை இந்தியா எதிர்கொள்ளவுள்ளதுடன், கயானாவில் நாளை அதிகாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள குழு சி போட்டியில் பப்புவா நியூ கினியை உகண்டா எதிர்கொள்ளவுள்ளதுடன், பார்படோஸில் நாளை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள குழு பி போட்டியில் ஓமானை அவுஸ்திரேலியா எதிர்கொள்ளவுள்ளது.



## முகாமையாளர் மரெஸ்கா

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லெய்செஸ்டரின் முகாமையாளரான என்ஸோ மரெஸ்காவை தமது புதிய முகாமையாளராக மேலதிக ஓராண்டுத் தெரிவுடனான ஐந்தாண்டு ஒப்பந்தமொன்றில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சி நியமித்துள்ளது.

## ஓய்வு பெற்ற கேதார் ஜாதவ்



இந்தியாவின் சகலதுறைவீரரான கேதார் ஜாதவ், சகலவிதமான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2014ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்ட 39 வயதான கேதார், 73 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடி 42.09 என்ற சராசரியில் 1,389 ஓட்டங்களைப் பெற்றதோடு, 27 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தார்.

## மேற்கிந்தியத் தீவுகள் அணி இலங்கை வந்தது



இலங்கையும் மேற்கிந்தியத் தீவுகளும் இருவகையான மகளிர் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் தொடர்களில் விளையாடவுள்ளன. இந்த இரண்டு அணிகளும் 3 போட்டிகளைக் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரிலும் சர்வதேச ரி20 கிரிக்கெட் தொடரிலும் விளையாடவுள்ளன.

இரண்டு வகை தொடர்களில் விளையாடுவதற்காக மேற்கிற்திியத் தீவுகளின் மகளிர் அணி இலங்கைக்கு வருகை தந்துள்ளது.

பங்களாதேஷில் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள மகளிர் ரி20 உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னர் இரண்டு அணிகளும் தங்களது பலத்தை ரி20 தொடரில் பரீட்சிக்கவுள்ளன.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் காலியில் ஜூன் 15, 18, 21ஆம் திகதிகளில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து ஹம்பாந்தோட்டையில் 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ரீ20 கிரிக்கெட் தொடர் ஜூன் 24, 26, 28ஆம் திகதிகளில் நடைபெறும்.இலங்கை மகளிர் அணி இந்தத் தொடருக்குப் பின்னர் அயர்லாந்துக்கு எதிரான தொடரில் விளையாடவுள்ளது.


## புதிய மேலங்கி

■ எம்.யூ.எம். சனூண்

புத்தளம் நாகாஸ் கிரிக்கெட் கழகத்தின் 13 வருட பூர்த்தியை முன்னிட்டு புதிய மேலங்கி தொகுதி ஞாயிற்றுக்கிழமை (02) அறிமுகப்படுத்தப்பட்டது. ஐக்கிய இராச்சியத்திலுள்ள கிறிஸ்டல் காஷ் அன்ட் கரி எனும் நிறுவனம் இதற்கு பூரண அனுசரணை வழங்கியிருந்து.




## ஜேர்மனி– உக்ரேன் சமநிலையில் முடிந்தது



ஜேர்மனியில் செவ்வாய்க்கிழமை (04) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் உக்ரேன் சமப்படுத்தியது.

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடிய ஸ்பானியக் கழகமான றியல் மட்றிட், ஜேர்மனிக் கழகமான பொரூசியா டொட்டமுண்டின் ஜேர்மனி வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்றிருக்கவில்லை.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 05 , ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.